ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

==========================================================================

# *பெண்ணிய நோக்கில் மாக்ஸிம் கார்க்கியின் "தந்தையின் காதலி"*

==========================================================================

***கட்டுரையாளர்***

***ம.வித்யா எம்.ஏ.,பி.எச்.டி***

*உதவிப்பேராசிரியர்,*

*தமிழத்துறை*

*தூய நெஞ்சக் கல்லூரி*

*திருப்பத்தூர்.*

==========================================================================

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆண் , பெண் உறவு குறித்த புரிதல் காலந்தோறும் விவாதத்ததிற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. தந்தை வழிச் சமூகத்தில் பெண் நுகர்வு பொருளாக மாற்றப்பட்ட வரலாறு மீண்டும் விசாரிக்கப்படுகிறது. இயற்கையின் இயல்பான உயிரியல் வேறுபாட்டைச் சமூக, பண்பாட்டுக் கண் கொண்டு நோக்கி பெண்ணை இரண்டாம் தர பாலினமாகக் கருதுவது சரியா என்னும் கேள்வி முன்வைக்கப்படுகிறது. கல்வி, பொருளாதாரம் சுயசார்பு முதலான கருத்தாக்கங்கள் பெண் மேம்பாட்டுக்கு அடிப்படை என்றாலும் கூட பாலியல் சுதந்திரம் அல்லது பாலியல் அரசியல் இன்றும் சமூக மேடைகளில் பேசப்படாத பொருளாகவே உள்ளது. ஆணுக்குப் பலதார மணத்தின் மூலம் பாலியல் சுதந்திரம் அளிக்கும் சமூகம் பெண்ணுக்குப் பாலியல் சுதந்திரத்தை அனுமதிப்பதில்லை. அந்த வகையில் மாக்சீம் கார்க்கியின் ''தந்தையின் காதலி'' என்னும் இந்த புதினம் விபச்சாரியான மால்வா என்னும் கதாப்பாத்திரத்தின் வழியே ஆண்களின் பாலியல் வேட்கை, அவர்களின் ஆளுகை, பாலியல் இச்சைக்கு தடை ஏற்படும் போது நடத்தப்படும் வன்முறை முதலியவற்றைக் கேள்வி கேட்கிறது. பெண்ணின் மன உணர்வுகளை அவளின் தேவைகளை பெண் மொழியாகவே பதிவு செய்கிறது. பெண்ணிய நோக்கில் தொ.மு.சி அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் புதினத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

### முன்னுரை

உலகினில் பொதுவாக தந்தை – மகள், தாய் – மகன், சகோதரன்- - சகோதரி போன்ற இரத்த உறவுஉடையவர்கள் பாலுறவு கொள்வதை அனைத்துப் பண்பாட்டினரும் தடை செய்துள்ளனர். குடும்ப அமைப்பு சிதைவுறும் என்பதே இத்தகைய தகாப்புணர்ச்சி விலக்குக்கு காரணமாகும் என்பது மானிடவியலாளர் மாலினோவஸ்கியின் கருத்து. ஈடிபஸின் தாய் – மகன் உறவு இங்கே கருத்தில் கொள்ளத்தக்கது. ஆனால் தந்தையின் காதலி என்னும் புதினத்தில் விபச்சாரியாக வரும் மால்வா வாஸிலி என்பவரோடு நெருக்கமாகப் பழகுகிறாள். வாஸிலியின் மகன் யாகோவும் மால்வா மீது மயக்கம் கொள்கிறான். அவளை அடைந்தே தீர வேண்டும் என முயல்கிறான். தந்தையும், மகனும் ஒரே பெண்ணின் மீது மையல் கொள்ளும் நிலையில் மால்வாவின் எண்ண வோட்டங்களைப் பெண்ணிய நோக்கில் நின்று இக்கட்டுரை ஆராய்கிறது.மால்வா வாஸிலியின் மனைவி இல்லையென்றாலும் தந்தையின் காதலி என்பதால் இப்புதினத்திலும் பாலியல் அரசியல் தலைத்தூக்குகிறது. தந்தை மையச் சமூகம் விபச்சாரியையும் விட்டு வைக்காமல் அடிமைப்படுத்துமா என்பதையும் இக்கட்டுரை மதிப்பிடுகிறது.

### கதைச்சுருக்கம்

தந்தையின் காதலி என்னும் இப்புதினத்தில் வரும் நாயகி மால்வா ஒரு விபச்சாரி. மருத நிலதகில் இருந்து நெய்தல் நிலத்துக்குப் பிழைக்க வந்தவர் வாஸ்லி. வாஸ்லியைக் காண மால்வா அடிக்கடி கடல் பகுதிக்கு வருவதுண்டு. வாஸ்லியின் வைப்பாட்டியாகவே மால்வா இருந்தாள். இச்சமயத்தில் வாஸ்லியின் மகன் யாகோவ் தந்தையைக் காண வருகிறான். அதே கடற்பகுதியில் வசிக்கும் மற்றொரு ஆடவன் ஸெர்யோஸ்கா. இவனும் மால்வாவின் அழகைக் கண்டு மயங்குகிறான். யாகோவ் தனது தந்தை தனது தாய்க்கு இழைத்தத் துரோகம் குறித்தோ, மால்வாவுடனான உறவை விடும்படியும் எதுவும் கேட்கவில்லை. மாறாக அவளை அடைந்தே தீர வேண்டும் என விழைகிறான். ஆனால் மால்வா அவன் உதிர்க்கும் காதல் வார்த்தைகளை மென்மையாகக் கண்டிக்கிறாள். ஆனால் அவனது ஆசைக்கு இணங்கவில்லை. கதையின் இறுதியில் வாஸ்லி ஊருக்குக் கிளம்புகிறான். மால்வா ஸெர்யோஸ்காவோடு செல்கிறாள். யாகோவ் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிறான். நாவலின் ஒவ்வொரு தருணத்திலும் மால்வா அவளுக்கான வாழக்கையை அவளாகவே வாழ்கிறாள்.

### தந்தை வழிச் சமூகம்

தந்தை வழிச் சமூகத்தின் முக்கியமான அடையாளம் ஆண் பெண் மீது செலுத்தும் அதிகாரம். நமது சமூக வரிசையில் ஆண்கள் பெண்களை ஆளுதல் என்பதை பிறப்புரிமையாக இருப்பதைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். ஒத்துக் கொள்ளத் தயங்குகின்றனர். இதற்குக் காரணம் நமது சமூகம் எல்லா வரலாற்று நாகரிகச் சமூகங்கள் போலவே தந்தைஉரிமைச் சமூகமாக இருப்பது தான் ( அருணா, பாலியல் அரசியல் பற்றிய கோட்பாடு குறிப்பும் சுருக்கமும்

*ப. 1) என்பதற்கிணங்க இக்கதையின் துவக்கத்தில் வாஸ்லி தன் மகனைக் மால்வாவுடன் கண்டதும் என்ன சொல்வது என தெரியாமல் தடுமாறுகிறான். ஆனால் மால்வாவோ,*

*" அதைப் பற்றி எனக்கென்னா கவலை ? அவனைப் பார்த்து நான் பயப்படணும்னு நினைக்கிறியா? இல்லை உன்னைப் பார்த்தா? என்று கசப்போடு கேட்கிறாள். நீ அவன் முன்னாலே தாளம் போட்டு குதிச்சதை நினைச்சாலே வேடிக்கையா இருக்கு. " என்று வெளிப்படையாக தான் வாஸ்லிக்கு அடிபணிந் து நடக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை அவனுக்கு உணர்த்துகிறாள். இந்தத் தந்தை வழிச் சமூகத்தில் பெண் சுயசார்பு அற்றவளாக, ஒரு பொருளாக மட்டுமே பார்க்கப்படுகிறாள் என்பதே உண்மை . ஆனால் மால்வாவோ செர்யோஸ்கா இங்கே இருந்தா அவனிடமும் வருவேன் உன் மகன் இங்கே இருந்தா அவனிடமும் வருவேன் என் அழகாலே எனக்கு இஷ்டம் இருக்கும் மனுஷனைப் பிடிச்சிப்பேன் என தனது பாலியல் சுதந்திரத்தை வாஸ்லியிடம் பிரகடனம் செய்கிறாள்.*

**தீவிரவாதப் பெண்ணியம்**

*தீவிர வாதப் பெண்ணியத்தின் மைய நோக்கம் தந்தை வழிச் சமூகத்தின் ஆளுகையைத் துடைத்தெறிவது . ஆணின் உட்சப் பட்ச அதிகாரமாக பாலியல் இன்பத்திற்கு வற்புறுத்தலையும், வன்முறையையும் கருதலாம். " காரண காரியமில்லாமல் நீ உன் பொண்டாட்டியை அடிச்சிப் பழக்கம் போலிருக்கு. அதனால என்னையும் அடிக்கலாம்னு பார்க்கிற. ஆனா நீ நினைச்சது தப்பு. எனக்கு நான் தான் அதிகாரி யாரைப்பத்தியும் எனக்கு பயமில்லை என்கிறாள். இவ்விடத்தில் மால்வாவிடம் தீவிரவாதப் பெண்ணியம் வெளிப்படுகிறது.*

**பெண்மொழி**

*தன்னுடைய வாழ்க்கையில் யாருக்காகவும் எதற்காகவும் பயப்படுவதில்லை என்று கூறிய மால்வாவிடம் சில தருணங்களில் பெண்ணுக்கே உரிய பேதைமைத் தன்மை வெளிப்படுகிறது. "அச்சமும் நாணமும் மடனும் நிச்சமும் பெண்பாற்குரிய" என்னும் தொல்காப்பிய நூற்பாக்கிணங்க வாஸ்லியால் அரையப்பட்ட மால்வா அதை ஏற்றுக் கொண்டு நீ என்னை இவ்வளவு உரிமையா அடித்தாய் எனில் நீ என்னை காதலிக்கிறாய் தானே என ஆசையாக வாஸ்லியிடம் கேட்கிறாள். மனம் உருகிய வாஸ்லி அவளின் அன்புக்கு அடிபணிகிறான். யாகோவிடம் ஊரில் உனக்கொரு காதலி இருக்கிறாளா? இருந்தால் அவள் என்னை விட அழகாக இருப்பாளா? என வினவுகிறாள். ஆக தீவிரவாதத்தையும், மடமைத்தன்மையையும் கொண்ட கதாப்பாத்திரமாக மால்வா சித்தரிக்கப்படுகிறாள்.*

***புதிய மதிப்பீடுகளை உருவாக்குதல்***

*பெண் பிள்ளைகளுக்கு கண்ணீரைத் தவிர வேறு கதி கிடையாது. திருமணம் முடிந்து விட்டால் கல்லானாலும் கணவன் என அவனது ஏவல்களுக்கு அடிபணிய வேண்டும். உடல்*

*ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் கணவனுக்கு நிரந்தர அடிமைகளாக வாழ வேண்டிய கட்டாயச் சூழலுக்குப் பெண்கள் தள்ளப்படுகின்றனர். ஜெர்மன் பெண்ணிய வாதியான மரியா மைஸ் கருத்துப்படி " பெண்ணின் உடலும் இயற்கையும் உற்பத்திப் பணியைச் செய்கின்றன. ஆயினும் பெண்ணின் உடல் பெண்ணிற்குச் சொந்தமில்லை. பிறரை வளப்படுத்தத் தான் பயன்படுகின்றன" ( தேவ தத்தா , பெண்ணியம் – ஒரு வரலாற்றுப் பார்வை பெண்ணியச் சிறப்பிதழ் எண் 10 மே.1991 . ப.5 )*

*மேற்கண்ட பிற்போக்குத் தனமான கொள்கைகளை நன்கு உள்வாங்கியதால் மால்வா அந்த அடிமைச் சிறையில் சிக்கிக் கொள்ளாமல், தன் சுதந்திரத்தைத் தானே தீர்மானிக்கிறாள். இங்கே பாரு இங்கே நான் யாருக்குமே சொந்தமில்லை .நான் இஷ்டப்பட்டா எங்கேயும் பறந்து போவேன். என் போக்கை யாரும் தடை பண்ண முடியாது என்று புதிய மதிப்பீடுகளை மால்வா பதிவு செய்கிறாள்.*

**உளப்பகுப்பாய்வுக் கொள்கை**

*உளப்பகுப்பாய்வுக் கொள்கையின் படி தகாப்புணர்ச்சி உலகம் தழுவிய விதியாக உள்ளது. ஆயினும் சில தருணங்களில் இதற்கு எதிராக நடப்பதும் உண்டு. கார கல்லா அவன் வர்ப்புத்தாய் ஜீலியாவுடனும் இத்தாலியின் மன்னன் நீரோ தன் தாயாருடனும் பாலுறவு கொண்ட செய்திகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன ( பக்தவச்சல பாரதி, பண்பாட் டு மானிடவியல், ப.382) ஒரு மகன் நனவிலி மனதில் தன் தாய்மீது கொண்டுள்ள பாலுணர்வை வெளிப்படுத்த அஞ்சுகிறான். ஏனெனில் அது தந்தையின் வெறுப்புணர்ச்சிக்கு மகனை ஆளாக்கும் ஒரு வித அச்ச உணர்வு. இவ்வுணர்வு தந்தையின் பாலியல் உரிமையைக் கைப்பற்றுவதாக அமைந்துவிடும் . அதைத் தந்தையால் கண்டிப்பாகப் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்வகையான கட்டுப்படுத்தப்பட்ட எண்ணங்கள் இந்த நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*யாகோவ் புணர்ச்சி வேட்கையோடு மால்வாவை நெருங்கிய போது மால்வா அதற்கு இடம் கொடுக்காமல் உங்க அப்பாவுக்கு இது தெரிஞ்சே உன்னை கொன்று விடுவார் என்று கூறி அவனை விட்டு விலகுகிறாள். என் அப்பாவிடம் இருந்து உன்னைத் தட்டிப் பறித்தே தீருவேன் என வீரச்சபதம் இடுகிறான் யாகோவ். மால்வா யாகோவின் உடலழகைக் கண்டு ரசித்தாலும், சுதந்திரம் பற்றி தீவிரமான நம்பிக்கை கொண்டு இருந்தாலும் மாஸ்லிக்கு துரோகம் செய்ய ஏனோ அவளது மனம் இடம் கொடுக்க வில்லை.*

**தவிர்ப்பு உறவு**

*உறவு முறைகளுக்கிடையே நிலவும் நடத்தைமுறை தனித்தன்மை கொண்டதாகவும், நிலையானதாகவும் இருக்கும். சுமத்திராவில் வசிக்கும் பட்டாஸ் சமூகத்தின் சகோதரனும் சகோதரியும் சேர்ந்து காணப்பட்டால் அதை மக்கள் அதிர்ச்சியுடன் நோக்குவர். தவறான*

பாலுறவு ஏற்பட்டிருக்கும் என ஐயம் கொள்வர். ஆகவே ஒருவர் வீட்டிலிருந்தால் மற்றவர் வீட்டை விட்டு வெளியே சென்று விடுவர் ( செல்லபெருமாள், தகாப்புணர்ச்சி , வாழ்வியல் களஞ்சியம் தமிழ்ப் பல்கலைக் கழகம், ப.735-38)

செர்யோஸ்கா மால்வாவுக்கும் , யாகோவுக்கும் இடையே நிகழும் முறையற்ற செயலைக் கண்டிக்குமாறு வாஸிலியிடம் உரைக்கிறான். உன்னோடு வாழும் அவளை யாகோவ் எப்படி பெண்டாள முடியும் என்றும் சித்தி பின்னாடி உன் மகன் செல்கிறான் என்று கூறுகிறான். மிகுந்த கோபத்திற்கு வாஸிலி உள்ளாகிறான். இருப்பினும் தான் கொண்டிருப்பது முறையற்ற உறவு என்பதை அறிந்து யாரையும் கண்டிக்க விரும்பாமல் ஊருக்குச் சென்று விடத் துணிகிறான்.

**மரபு வழிச் சமூகத்தின் எச்சம்**

குடும்பம் தனி மனிதருக்காகவும், சமுதாயத்திற்காகவும் பெரும்பங்காற்றுகிறது. பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது என்பார் லெவியும் பாலர்சும். ( பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.355) . இத்தகையக் குடும்பக் கட்டமைப்பில் ஆணுக்கு பலதார மணம் மூலம் பாலியல் சுதந்திரம் வழங்கும் சமூகம் சொத்துடமை காரணமாக பெண்ணுக்கு அதை மறுத்தது. தன் கணவனைப் பிரிந்து வாடிய நிலையில் யாகோவின் தாய் புலம்பிக் கொண்டிருக்கும் போது வாஸ்லி தனியான ஒரு இடத்தில் தன் காதலியான மால்வாவோடு வாழ்ந்து வருகிறார்.

செர்யோஸ்கா மூலம் தன் காதலி பின்பு தன் மகன் செல்வதை அறிந்து மனம் வருந்திய தந்தை அவனை ஊருக்குச் செல்லும்படி ஆணையிடுகிறார். ஆனால் அவன் மறுத்ததால் அதற்கு மால்வா காரணமாக இருப்பாளோ என்பதை அறிந்து கோவப்பட்டு யாக்கோவைத் தாக்குகிறார். ஆனால் மகனால் தந்தை அவமானப்படுத்தப் படுகிறார். மானமழிந்ததாக நினைத்த வாஸ்லி ஒழுக்கம் கெட்டப் பெண்ணுக்காக ஏன் சண்டையிட வேண்டும் எனக் கருதிக் கடவுள் தன் மனைவியை விட்டு வந்ததற்கான சரியான தண்டனையாக இதை ஏற்றுக் கொள்கிறார். வாஸ்லியின் மனமாற்றம் மூலம் மரபார்ந்த குடும்ப அமைப்பினை மக்சீம் கார்க்கி பதிவு செய்கிறார்.

**பாலியல் சுதந்திரம்**

செர்யோஸ்கா வாஸ்லியிடம் யாக்கோவ் மால்வாவின் மீது காதல் கொள்கிறான் என்று கூறிய போது வாஸ்லி செர்யோஸ்காவிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறான். இந்த விவகாரத்தில் அவன் தலையிட காரணம் என்ன என்று வினவுகிறான். அதற்கு செர்யோஸ்கா எனக்கு மால்வாவை மிகவும் பிடிக்கும். அவள் தவறாக நடந்து கொள்வது எனக்கு மனவேதனை தருகிறது. என்கிறான். ஒருநாள் மால்வாவை தனியாக ச் சந்திக்கும் செர்யோஸ்கா அவளிடம்

பேச்சுக் கொடுக்கிறான். நீ வாஸ்லியை விட்டு விட்டாயா என்கிறான். அதற்கு மால்வா அவன் என்னை அடித்ததால் அவன்மீது கோபமாக இருப்பதாக கூறுகிறாள்.

அடிக்கும் அளவு காதலா என்கிறான். அதற்கு மால்வா நான் உங்களில் யாரையுமே காதலிக்க வில்லை என்கிறாள். முதன் முறையாக மால்வா தன் மனம் திறந்து தனது ஆசைகளை செர்யோஸ்கா விடம் கூறுகிறாள். இந்த உலகத்தில் தனிமையைத் தவிர நான் எதையும் நேசிக்கவில்லை. இந்த உலக உயிர்களெல்லாம் உணர்ச்சியற்ற வெறும் பொம்மைகளாகத் தெரிகின்றனர் என்கிறாள். விளையாட்டாக நீ யாக்கோவைத் தூண்டியதால் அவனுக்கும் வாஸ்லிக்கும் இடையே பெரும் சண்டை வலுக்கப் போகிறது என்றான். மால்வா பெரிதாக அதனைக் கண்டுகொள்ளவில்லை.

இறுதியாக வாஸ்லி ஊருக்குச் செல்லும் போது எந்த உணர்ச்சியும் இன்றி அவனை வழினுப்புகிறாள். மேரி புச்சோல்ட்ஸின் ' அரசியல் ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் விலக்கப் பட்டதாக , அருவருக்கத் தக்கதாகக் கருதப்படும் பெண்ணின் அனைத்து வகையான அனைத்து வடிவிலான பாலியல் அனுபவங்களின் ஆசைகளின் பன்மைத் தன்மையை அங்கீகரிப்பது என்பது பெண்ணிய நோக்கங்களின் மையமான் இலக்காகும் என்பது பாலியல் பெண்ணிய வாதிகளின் கருத்து ' ( பெண், பெண்ணியம் , பெண்நிலை, த.விஜய லட்சுமி, ப. 126)

### அதிகாரப் பராமரிப்பு

ஆளும் பால் ஆளப்படும் பால் மீது தனது அதிகாரத்தைச் செலுத்துவதே அதிகாரப் பராமரிப்பு ஆகும். இந்த புதினத்தில் தொடக்கத்தில் விரும்பும் யாரோடும் நான் இருப்பேன் என்று உரைக்கும் மால்வா வாஸ்லியால் தாக்கப்படுகிறாள். அதே போல் யாகோவின் இச்சைக்கு ஆட்படும் படி மால்வா கட்டாயப் படுத்தப் படும் போது கேலி செய்து அவனை மறுப்பதால் அவனால் மாயப் பிசாசாகப் பார்க்கப்படுகிறாள். நாவலின் இறுதியில் வாஸிலி அந்த இடம் விட்டுச் சென்றாலும் மனதால் அவளைக் கொல்ல வேண்டும். ஆனால் என்னால் அல்ல யாராவது ஒருவரால் கட்டாயமாக அவள் கொலை செய்யப்படுவாள் என்ற பெருத்த நம்பிக்கையோடு வாஸ்லி கிளம்புகிறான். அதிகாரப் பராமரிப்பின் அனைத்து தடைகளையும் சந்தித்த போதும் சுயசார்பினை மால்வா இழக்காமல் தொடர்ந்து போராடுகிறாள். தந்தை வழி ச் சமூகத்தின் அதிகாரம் மனைவியை மட்டுமல்ல காதலியையும் விட்டு வைக்காது என்பது புலப்படுகிறது.

### பெண் வெறுப்பும் , புகழ்தலும்

மால்வா தனது ஆசைக்கு இணங்காத போது அவளை வசைப் பாடுவதும், ஆசைக்கு இணங்கும் போது அவளைப் புகழ்வதும் நாவல் முழுவதும் இழையுயோடுகிறது. வாஸ்லி மாயக்காரி என்றும் பிசாசு என்றும் கூறி அவளைக் கடுமையாகப் பேசுகிறான். அவள் அவனைக் காண வராதபோது அவளுக்காக

*ஏங்கித் தவிக்கிறான். இதே போல் அவளை நேசிக்கும் செர்யோஸ்கா அவளைப் பற்றிப் பேசும் போது அவளை முனி என்று கூறுகிறான். பின்பு அவனே அவளைத் தனியே சந்திக்கும் போது உன்னைப் போல ஒரு வித்தியாசமான பெண்ணைக் கண்டதில்லை என்கிறான் . ஆனால் மால்வாவிடம் இருந்து இந்த வசைமொழிகளுக்கோ வர்ணனைகளுக்கோ எந்தவித எதிர்மொழியும் வெளிப்படவில்லை. பெண்ணைப் புகழ்வதும், பெண் வெறுப்பும் கூட பெண் அடிமையின் கூறுகளாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.*

***முடிவுரை***

*அறிவியல், தொழில் நுட்பத்தில் பல்வேறு முன்னேற்றங்களைக் நாடு கண்டபோதும் சமூகமானது இன்னும் பிற்போக்கான கருத்துகளை அதன் ஆழம் அறிமாலலேயே கடத்தி வருகிறது என்பதே நிதர்சனமான உண்மை. பெண்ணின் மனம் மற்றும் உடலுக்கான முழு உரிமையும் அவளுக்கே உரியது. உடல் வேறுபாடு உயிரியல் வேறுபாடே அன்றி ஏற்கனவே உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ள ஒழுக்கக் கண்ணாடியை அணிந்து கொண்டு இக்காலத்தையும் காண வேண்டிய அவசியம் இல்லை. பெண்ணிய நோக்கில் ஆராயப்படும் இத்தகைய ஆய்வுகள் சமூகத்தின் சிந்தனை மாற்றத்திற்கு அடித்தளமிடும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் மக்சீம் கார்க்கி ஒரு பெண் தனக்கான பாலியல் சுதந்திரத்தைத் தானே தேடிக் கண்டடைவதைச் சிறப்பாகப் பதிவுச் செய்திருக்கிறார். பெண் தனக்காக வாழவேண்டிய உரிமையை அவளுக்கு அளிக்கும் சமூகப்பொறுப்பை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.*

***பார்வை நூல்கள்***


1. *தந்தையின் காதலி – மாக்ஸிம் கார்க்கி தமிழில் தொ.மு.சி ரகுநாதன் , 2021*
2. *பெண், பெண்ணியம், பெண்நிலை – த.விஜயலட்சுமி, 2020*
3. *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், அரங்க மல்லிகா, 2002*
4. *பண்பாட்டு மானிடவியல் , பக்தவச்சல பாரதி, 1990.*